23rd September 1958]

Public Health and Nursing Course

* 452 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have instituted an integrated course of Public Health and Nursing in the General Hospital, Madras;

(*b*) if so, the details thereof; and

(*c*) the expenditure involved and the number of trainees who passed the course in 1957?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir.

(*b*) The objectives of the course are to train nurses who can function both in hospitals and Public Health fields and to develop Public Health as an integral part of the basic training. The trainees are instructed in the following additional subjects:—

Personal Hygiene.

Community Health.

Health teaching.

Preventive Medicines and Public Health.

The World Health Organization has provided an International nurse to assist in the implementation of the scheme and also a station wagon, teaching aids, text-books and kit bags.

(*c*) The expenditure involved is Rs. 19,818 recurring per annum and Rs. 350 non-recurring. One hundred and thirty-nine nurse pupils have been admitted to the course on or after 1st July 1957. The first batch of nurse pupils who are undergoing the training will be completing their course only in June 1960.

SRI N. K. PALANISAMI: இம்மாதிரி ஒரு திட்டம் மதுரையில் ஏற்படுத்த சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இப்பொழுது இதை ஒரு இடத்திலே, சென்னையிலே, ஏற்படுத்தி நடத்தி வருகிறோம். எல்லா இடத்திலும், மதுரையில், விஸ்தரிக்க, மற்ற எல்லாவற்றையும் பார்த்து விட்டு அப்புறம் செய்ய வேண்டும்.

DR. SRIMATHI T. S. SOUNDRAM RAMACHANDRAN: பி.எஸ்ஸி.-இன் நர்ஸிங் என்ற கோர்ஸ் இப்பொழுது டில்லியில்தான் இருக்கிறது, அநேகம் பேர் அங்கே போகமுடியாமல் ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. அந்த கோர்ஸை மதராஸிலே ஏற்படுத்த எதாவது திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: தற்காலம் அம்மாதிரி திட்டம் ஒன்றும் இல்லை.

House-sites for Harijans

* 453 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைக் கட்டு நிலங்கள் கிரயத்துக்கு வாங்கி இலவசமாகக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக ஜில்லா ஹரிஜன நல இலாகா மேற்பார்வையின் கீழ் எந்தெந்த ஜில்லாக்களிலே ஸ்பெஷல் தாசில்தார்களும், சம்பந்தப்பட்ட கீழ்த்தர உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டிக்கின்றனர் ?